# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்

## வினா விடை நேரம்

## வினா எண் 336

## தலைப்பு "தெய்வீக ஒருமைபாடும் உண்மை அன்பும் "

## நம் அன்பிற்குரிய பேராசிரியர் திரு

*அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 172-185 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி.*

கேள்வி:ஸ்வாமி பண்டிதர்கள் அடிக்கடி ப்ரக்ருதி மற்றும் புருஷ என்ற பதங்களை உபயோகப்படுத்துகிறார்கள்.
அது பற்றி எங்களுக்கு சொல்லியருள வேண்டுகிறோம் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
ப்ரக்ருதி என்பது உருவம் எடுத்து உள்ள திட பொருளையும் புருஷ என்பது உருவமற்ற சக்தியையும் குறிக்கின்றது.
இவையே நேர்மறை மற்றும் எதிர்மறை தன்மைகளாகும்
ஒரு பல்பு ஒளிர்வதற்கு மின்சாரம் வேண்டும்.பல்பு மட்டும் தானே ஒளிர முடியாது.பல்பு இல்லாவிட்டால் மின்சாரத்தால் பயனில்லை.அது போலவே சிருஷ்டி அனைத்துமே ப்ரக்ருதி மற்றும் புருஷ இவற்றின் சேர்க்கையாகும்
இவை இரண்டுமே ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடன் ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றன.
ப்ரக்ருதி பெண்ணினம் ஆக பார்க்கப்படுகிறது.கடவுள் ஒருவரே ஆண் ஆவார்.மகளிர் கல்லூரியில் நாடகத்தின் அனைத்து கதாபாத்திரங்களையும் மகளிரே ஏற்று நடிக்கின்றனர்.அது போலவே உடல் ரீதியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு இருந்தாலும் உள்ளே உறையும் ஆத்மா ஒன்றே.உடல் என்பது எலும்புகளின் சேர்க்கையாகும்
அது நீர்க்குமிழி போன்று நிலையற்றது.நோய்களால் பீடிக்கப்படுவது.எலும்பு தசை மல மூத்திரங்களால் ஆனது.அது துர்நாற்றத்தையே கொண்டுள்ளது.சகந்தத்தையோ நறுமணத்தையோ அல்ல.
மனித உடலே ப்ரக்ருதி ஆகும் .அது பல மாற்றங்களுக்கு உள்ளாகிறது.ஆனால் மாறாத நிலையான சத்யமே புருஷ- கடவுள் ஆவார்.இதில் மதிப்பு மிக்கது புருஷ -கடவுளே ஆவார்.ப்ரக்ருதி யின் மதிப்பு புருஷவுடன் இணைந்து இருப்பதால்தான்.
சர்க்கரையை கோதுமை மாவுடன் சேர்த்தால் ரவாலட்டு கிடைக்கின்றது.இதே சர்க்கரை பிஸ்தா கடலை மாவு என வேறு எந்த மாவு பொருளுடன் சேர்ந்தாலும் சுவையான இனிப்பு கிடைக்கும்.அது போலவே புருஷ ப்ரக்ருதியின் மூலமாக வேறு வேறு ரூபமும் பெயரும் எடுத்து செயல்படுகிறது

ஆனால் புருஷ நேரம் காலம் இடம் இவைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டு நின்று ஒரு சாட்சியாக ஞானப்பேரறிவாக மட்டுமே இருக்கிறது.
புருஷ தான் ப்ரக்ருதியை தோற்றுவித்தது.
புருஷ என்பது நிஜம்.ப்ரக்ருதி என்பது நிழலாகும்.
ஓரிடத்தில் நீர் நிரம்பிய தங்கம் வெள்ளி வெண்கலம் மற்றும் களிமண் பாத்திரங்கள் உள்ளன.சூரியனின் ஒளி அனைத்திலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்குமே தவிர வேறுபடாது.
சூரியன் புருஷ ஆவார். பாத்திரங்கள் ப்ரக்ருதியாகும்.
உருவம் உள்ள ஜடப்பொருளும் உருவமற்ற சக்தியும் சேர்ந்ததே கடவுள் ஆவார்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி தீவிர பக்தர்களில், சிலர் ஸ்ரீ மகாவிஷ்ணுவையும் வேறு சிலர் சிவ பெருமானையும் வழி படுகின்றனர்.இவர்கள் ஒருவுக்கொருவர் எதிரெதிர் குழுக்களாக செயல்படுகிறார்கள்.இவர்களை ஒன்று படுத்துவது எவ்வாறு ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
இது கடைந்தெடுத்த அறியாமை மற்றும் முட்டாள்தனமாகும்.இங்கே இறையை தவிர இரண்டாவதாக எதுவுமே இல்லை என வேதங்கள் கூறுகின்றன.
உண்மை ஞானம் என்பது இரட்டை தன்மை கடந்த ஏகத்துவ நிலையாகும்.ஒவ்வொரு ஆன்மீக சாதகரும் வேற்றுமையில் இருக்கின்ற ஒற்றுமையை கண்டுணர வேண்டும்.வைஷ்ணவர்கள் திருமாலை வெங்கடரமணா என்றும் சைவர்கள் திருமாலை வெங்கடேஸ்வரா என்றும் வழிபடுகின்றனர்.வேறு பெயர்களால் வழிபட்டாலும் இருவருமே ஒரே கடவுள் தான்.
ஒரு முறை ஓர் அரசர் வைஷ்ணவ மற்றும் சைவ பண்டிதர்களை அழைத்து இரண்டு கடவுள்களிலும் யார் பெரிய கடவுள் என்ற விவாதத்திற்கு ஏற்பாடு செய்தார்.
பங்கு பெற்ற ஒவ்வொருவரும் மிக தெளிவாக தங்கள் வாதங்களை எடுத்து வைத்தனர்.அதை கேட்ட பிறகு அரசர் தன் தலைமை அமைச்சரை அழைத்து தீர்ப்பு அளிக்கும்படி பணித்தார்.
அமைச்சர் எழுந்து சொன்னார் அரசே இவர்களுக்கு தெரிந்ததெல்லாம் கொஞ்சமே.வைஷ்ணவர்கள் ஸ்ரீ மகாவிஷ்ணு தான் பெரிய கடவுள் என வாதிடும் போது அவரிடத்தில் சிவ பெருமானும் இருப்பதை உணரவில்லை.அது போல் சைவர்களும் சிவபெருமானிடத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவும் உறைவதை அறியவில்லை என்றார்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி உங்களுடைய அருளுரைகளில் ப்ரேமையை பற்றி வலியுறுத்தி கூறுகின்றீர்கள்.
எங்களிடம் ப்ரேமை இல்லையா.அதை உண்டாக்கி கொள்வது எவ்வாறு.
ப்ரேமைக்கும் மோகத்திற்கும் உள்ள வித்தியாசம் தான் என்ன.

ஸ்வாமியின் பதில்:
நீங்கள் உங்களிடம் ப்ரேமை இருப்பதாக நினைக்கிறீர்கள்.அது ப்ரேமை அல்ல.அபிமானம் அதாவது பற்று மட்டுமே.இவை இரண்டிற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு.நீங்கள்

தவறான திசைகளில் அன்பை திருப்பி விடுவதால் அது உடல் பற்றில் போய் முடிகிறது.உண்மை அன்பு என்னவென்று உங்களுக்கு தெரியவில்லை.
உங்கள் குழந்தைகளிடம் உங்களுக்கு இருக்கின்ற அன்பு வாத்ஸல்யம்.மனைவியிடம் இருப்பது அனுக்ரஹம்.
வெளிஉலக பொருட்களின் மீது இருப்பது மமகாரம்.
உங்களுக்கு சமமானவர்களிடம் ஏற்படுகின்ற அன்பு நட்பு.இவ்வாறாக உங்களுடைய அன்பு பல திசைகளிலும் தெறித்தோடுகின்றது.இது உண்மையான அன்பு அல்ல.இது உலகாயதமான உடல் சம்பந்தப்பட்ட மாறக்கூடியதாகும்.இவை உங்களை மகிழ்விக்கலாம். ஆனால் எப்போதுமே ஆனந்த்தை தராது.
இன்றைக்கு சந்தோஷத்தை கொடுக்கும் விஷயம் நாளை கொடுக்காமல் போகலாம்.
குளிர் காலத்தில் இதமாக இருக்கும் கம்பளி ஆடை கோடை காலத்தில் இதம் தராது.மகிழ்ச்சி என்பது இடம் காலம் மனநிலையை பொறுத்ததாகும்
தசரதர் ஸ்ரீ ராமர் மீது கொண்ட பற்றினால் அவரது பிரிவை தாங்க முடியாமல் உயிர் விட்டார் இல்லையா.
தசரதர் தன் ஆசை மனைவியின் சொல்லுக்கு கட்டுப்பட்டு ஸ்ரீராமரை காட்டுக்கு அனுப்பினார்.ஆனால் ஸ்ரீ ராமரோ தன் மனைவியை காட்டிலே எட்டு ஆண்டுகள் பிரிந்திருந்ததோடல்லாமல் சலவை தொழிலாளி அவதூறு சொல்லி விட்டான் என்பதற்காக மீண்டும் தன் மனைவியை காட்டிற்கு அனுப்பினார்.ராஜ்ஜியத்தின் மீதும் அவருக்கு எந்த பற்றும் இருக்கவில்லை.தந்தையின் கட்டளைக்கு கீழ் படிந்து அரச பதவியை துறந்து காட்டிற்கு சென்றார்.
மஹாபாரதத்தில் என்ன ஆயிற்று.
திருதிராஷ்ரன் தன் பிள்ளைகள் மேல் கொண்ட பாசத்தால் அவர்கள் பாண்டவ சகோதரர்களுக்கு இழைத்த தீங்குகள் அனைத்தையும் தடுக்காமல் அமைதி காத்ததால் கௌரவ வம்சம் அழிந்து போனது.
யசோதா அம்மாவால் ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீகத்தை உணர முடியாமல் போனதற்கு காரணம் கிருஷ்ணர் தன் மகனே என்ற வாத்ஸல்யம் தான்.
புத்தர் தன் மனைவி யஸோதரா மற்றும் மகன் ராகுலிடம் கொண்ட பற்றை விடாமல் இருந்திருந்தால் அவரால் ஞானம் பெற முடிந்திருக்குமா.
ஸ்ரீ கிருஷ்ணர் தான் சிறு வயதில் விளையாடி களித்த மாளிகையை விட்டு வெளியேறிய பிறகு மீண்டும் அதனுள் நுழையவே இல்லை தெரியுமா.காரணம் அதனிடம் அவருக்கு பற்று ஏதும் இல்லை.
ஆனால் கோபிகைகளுடனான அவரது தொடர்பு எப்போதும் அப்படியே இருந்ததற்கான காரணம் அது தெய்வீகமான ப்ரேம பந்தமாகும்.
பாண்டவர்கள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மீது வைத்திருந்த பேரன்பு அவர்கள் பல்வேறு துன்ப துயரங்களுக்கு ஆளான போதும் மாறாமல் அப்படியே இருந்தது.
ப்ரேமை என்பது மாற்றமில்லாதது.அசைக்க முடியாதது.இரட்டை தன்மை இல்லாதது.
புகழ்சிக்கு மயங்குவதோ இகழ்ச்சியினால் ஓடி மறைந்து விடுவதோ உண்மை அன்பு அல்ல.தன்னலமில்லாது அன்பு நிபந்தனையற்றது.அன்பே தெய்வீகம்.யேசு கிறிஸ்து பேரன்பினால் தான் தன்னை சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னித்து விடுமாறு வேண்டி கொண்டார்.இது அன்பின் உச்சமல்லவா.

பச்சிளம் குழந்தை எப்போதும் சிரித்து மகிழ்ந்து ஆனந்தமாகவே இருக்கிறது.
வளர வளர பொம்மைகளை விரும்புகிறது.விளையாட்டை விரும்புகிறது.நண்பர்களை விரும்புகிறது.
வாலிப பருவத்தில் ஒரு துணையை தேடி அடைகிறது.பிறகு தன் குடும்பம் தனது உடமைகள் சொத்து சுகங்கள் என அந்த வட்டம் விரிந்து கொண்டே செல்கிறது.
அது கடைசியில் நீர்த்துப் போய் பந்த பாசத்தில் போய் முடிகிறது.
நீங்கள் கடவுள் மேல் வைக்கும் அன்பு பக்தியாகி அடக்கம் பணிவு கீழ்படிதல் போன்ற நல்ல குணங்களை பெற்று தந்து தெய்வீக ஆனந்த்தை அனுபவிக்க செய்கிறது.அதனால் முக்தியும் கிடைக்கின்றது.இன்றைய தேவை இப்படிப்பட்ட அன்பு அனைவரிடத்திலும் பல்கி பெருகுவதுதான்
அன்பை முதலில் குடும்பத்திலிருந்து ஆரம்பியுங்கள்.பிறகு உறவினர்கள் சமூகம் என்று விரிவு படுத்தி கொண்டே போய் பிரபஞ்ச மனைத்தையும் நேசியுங்கள்.
நீங்கள் அன்பு செய்வதின் மூலம் மட்டுமே கடவுளை உணர முடியும்.ஏனென்றால் கடவுள் அன்பே வடிவானவர்.
அனைவரின் உள்ளேயும் உறையும் இந்த அன்பினை நீங்கள் கண்டுணர்ந்து வழி நடத்த வேண்டும்.
அன்பு என்பது இயல்பிலேயே இறைவன் மனிதனுக்கு கொடுத்துள்ள பெருங் கொடையாகும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்
ஜெய் சாயிராம்.